RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF
MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

DOI: 10.54392/ijmrd223S17

# Chathuragiri Hills Kunduruti Paliyars' Herbal Medicine

## சதுரகிரி மலைவாழ் குண்டுருட்டிப் பளியர்களின் மூலிகைமருத்துவம்

**K. Kamaraj** [a,*]

[a] Sociological, Arts & Cultural Department, International Institute of Tamil Studies, Chennai-600113, Tamil Nadu, India.

*Corresponding author Email: lingu.kamaraj@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijmrd223S17

Received: 13-04-2022; Revised: 08-07-2022; Accepted: 11-07-2022; Published: 19-08-2022

**Abstract:** Chathuragiri Hill is a hill in the Western Ghats located in the village of Chaptoor in Peraiyur Taluk of Madurai District. Chathuragiri is considered to be one of the highest mountains in India. It is noted that the second highest mountain is Nilgiri and the third highest is Chathuragiri. Also on Chathuragiri hill, there are temples called Sandhana Mahalingam and Sundhara Mahalingam. Special worships are held in these temples on Aadi New Moon days. People from various districts of Tamil Nadu participate in these rituals and worship. Chathuragiri Hill is also referred to as the hill where the eighteen Siddhas lived. Various rare types of herbal plants are also found on this hill. It is on such a special hill that the Kunduruti Paliyars live. The purpose of the study is to explain the medical methods and medicinal herbs used by the nomadic people living in the forest for the issues arising from a few insects living in the forest and sudden physical problems. The purpose of this study is to explain which herbal plants are used by Paliyar people for which diseases and how.

**Keywords:** Chathuragiri Hill, Kunduruti Paliyar, Paliyar people, Physical Problems

**Language:** **Tamil**

### முன்னுரை

சதுரகிரி மலை என்பது மதுரை மாவட்டம் பேரையூர் தாலுக்கா சாப்டூர் என்னும் கிராமத்தில் அமைந்துள்ள மேற்க்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளின் ஒரு மலையாகும். இந்தியாவிலேயே மிக உயரமான மலைகளோடு ஒப்பிடும் வகையில் சதுரகிரி மலை அமைந்துள்ளது. இரண்டாவது உயரமான மலை நீலகிரி மலை என்றும் மூன்றாவது உயரமான மலை சதுரகிரி மலை என்றும் குறிப்பிடப்படுகின்றன. மேலும் சதுரகிரி மலையில் சந்தன மகாலிங்கம், சுந்தர மகாலிங்கம் ஆகிய கோயில்கள் அமைந்துள்ளன. இக்கோயில்களில் ஆடி அமாவாசை நாட்களில் சிறப்பான வழிபாடுகள் என்பது நடைபெறுகின்றன. இவ்வழிபாடுகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த பல்வேறு மாவட்ட மக்கள் கலந்துகொண்டு வழிபாடு செய்கின்றனர். சதுரகிரி மலை என்பது பதினெண் சித்தர்கள் வாழ்ந்த மலை என்றும் குறிப்பிடப்படுகிறது. இம்மலையில் பல்வேறு அரிய வகையான மூலிகைத் தாவரங்களும் காணப்படுகின்றன. இத்தகைய சிறப்புமிக்க மலையில்தான் பளியர் எனப்படும் குண்டுருட்டிப் பளியர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

### பழங்குடிகள்

பழங்குடிகள் என்ற சொல் தொல்குடி ஆதிவாசி மலையின மக்கள் இனக்குழு மக்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். தமிழகத்தில் 36 வகையான பழங்குடி மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தமிழகத்தின் மேற்குத் தொடர்ச்சி மலையான சதுகிரிமலை ஊட்டி கொடைக்கானல் வால்பாறை போன்ற மலைப்பகுதிகளில் சிறு சிறு குழுக்களாக தங்களுக்கே உண்டான பழமையான பண்பாட்டு மரபு நிலைகளில் இன்றும் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் பெரும்பாலும் காடுகளில் கிடைக்கக்கூடிய தேன், கிழங்கு போன்ற இயற்கை உணவுகளையே உணவாக உட்கொள்கின்றனர்

(Harichandran, 2018). இத்தகைய பழங்குடி மக்களில் பளியர் எனப்படும் குண்டுருட்டி பளியர் இன மக்களிடம் காணப்படும் இயற்கை மருத்துவ முறைகள் குறித்து விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

## ஆய்வின் பயன்

பளியர் இன மக்கள் எந்தெந்த மூலிகைச் செடிகளை என்ன நோய்களுக்கு எவ்வாறு பயன்படுத்துகின்றனர் என்பதை விளக்குவதே இவ்வாய்வின் பயனாகும்.

## மருத்துவ குணமுள்ள செடிகளும் அதன் பயன்பாடும்

- சிரியாணங்கைச்செடி
- அமுக்குராசெடி
- சதை ஒட்டிச்செடி
- அறுவா வெட்டிச்செடி
- வெள்ளைஎருக்கச்செடி
- சீவக்காய்கொடி
- மூத்திரவள்ளிக்கிழங்கு
- கடுக்காய்பொடி
- வெள்ளைகுண்டுமுத்துகொடி
- தொட்டால்சினிங்கிச்செடி
- மூட்டநாரிச்செடி
- மூட்டநாரிச்செடி
- மிளகு அருணைக்கொடி
- நொச்சிச் செடி
- சிறுதும்பைச்செடி
- நாயுருவிச் செடி
- கொட்டப்பாக்கு

மேற்கண்ட செடிகளின் மருத்துவப் பயன்கள் குறித்து பின்வருமாறு விளக்கப்படுகின்றன.

## சிரியாணங்கைச் செடி

காட்டுப்பகுதியில் கொடிய விசமுள்ள பாம்பு போன்ற விசமுள்ள சந்துக்கள் கடித்தால் உடனே இந்த சிரியாணங்கைச் செடியின் இலையைச் சாப்பிட்டால் எத்தகைய விசக்கடிகளும் உடனே சரியாகிவிடும். இநத மருந்தினை உட்கொள்வதற்கு பத்தியம் கிடையாது.

## அமுக்குராச் செடி

அமுக்குராச் செடி ஆண்களின் ஆன்மைத் தன்மையினை அதாவது விந்து உற்பத்தியினை அதிகரிக்கச் செய்யும். இந்தச் செடியின் இலையை இடித்து சாறு எடுத்து ஆண்மைக்குறை உள்ளவர்கள் சாப்பிட்டு வந்தால் மேற்சொன்ன பிரச்சினை தீர்ந்துவிடும். ஆதனால் இது ஆண்மைப் பெருக்கி என்றும் இச்செடி சொல்லப்படுகிறது.

### சதை ஒட்டிச்செடி

பளியர்கள் உயர்ந்த மலைப் பகுதிகளில் ஏரி தேன் எடுக்கும்போது ஏற்படும் காயங்கள் மற்றும் காட்டிலுள்ள குச்சிகள் காலில் குத்திவிட்டால் புண் ஏற்பட்ட இடத்தில் இச்செடியின் இலையைத் தண்ணீர் விட்டு கெட்டியாக அரைத்துப் புண்ணுள்ள இடத்தில் பத்துப் போட்டால் எவ்வளவு பெரிய புண்ணாக இருந்தாலும் ஓரிரு வாரங்களில் ஆறிவிடும் (Palanivel Rajan, 2014).

### அருவாவெட்டிச் செடி

இச்செடியின் இலையைப் பிடுங்கி தண்ணீர் விட்டு நன்றாக கட்டியாக அரைத்து கோடாரி, அருவா போன்ற இரும்புக் கருவிகளால் ஏற்படும் வெட்டுக் காயங்களில் தடவி வந்தால் கை, காலில் ஏற்பட்ட புண்கள் விரைவில் ஆறிவிடும்.

### வெள்ளை எருக்கஞ்செடி

வெள்ளை எருக்கன் செடியில் உள்ள கொழுந்து இலைகளைப் பிடுங்கி அதை மென்று பாம்பு கடித்தவர்கள் சாப்பிட்டால் பாம்பின் விசம் முறிந்து உயிர் பிழைத்து விடுவார்கள். இதற்கு பத்தியம் ஏதும் கிடையாது.

### சீவக்காய்கொடி

சீகக்காய்கொடியில்உள்ளநெத்தை எடுத்து அதனை நன்றாக அரைத்துப்பொடியாக்கி தலைக்குத்தேய்த்து குளித்துவந்தால் பொடுகு கொப்பலங்கள்வராது. மேலும் இப்பொடியானது உடல்சூட்டைத்தணிக்கும்.

### மூத்திரவள்ளிக்கிழங்கு

மூத்திரவள்ளிக் கிழங்கை எடுத்து அதைப் பச்சையாக அடுப்புத்தீயில் போட்டு வாட்டி கிழங்கின் மேல்த்தோலை உரித்து அதன் கிழங்கை 5 வயதுக்குமேல் உள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் அதாவது உரக்கத்தில் சிறுநீர் கழிப்பவர்கள் சாப்பிட்டுவந்தால் தன்னை அறியாமல் இரவு நேரத்துக்கத்தில் மூத்திரம் வருவது நின்றுவிடும் இக்கிழங்கினைத்தொடர்ந்து ஒருவாரம் உண்டு வரவேண்டும்.

### கடுக்காய்பொடி

மழைக்காலங்களில் இருமல் சளி என்பவை குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரைதொடர்ந்து உண்டுவர நாள்பட்ட இருமல் சளி போன்றவைகள் சரியாகிவிடும்.

### சீவசஞ்சீவிக்கொடி

சீவசஞ்சீவிக்கொடியின் இலையைப்பரித்து நன்றாக வெயிலில் காயவைத்து அதனை உரலில் போட்டு பொடியாக்கி பின்பு இடித்தப்பொடியை கஞ்சித்தண்ணீரில் கலக்கி வெறும்வயிற்றில் காலையில் ஒருவேலைமட்டும் குடித்துவந்தால் உடலில் உள்ள சூடு மற்றும் பித்தம்நீங்கிவிடும் (Palanivel Rajan, 2014).

### விப்பூரிக்கிழங்குக்கொடி

இந்தக்கொடியின் அடிப்பகுதியில் உள்ள கிழங்கைமெண்டு பல்வலி இருக்கும் இடத்தில் அரைமணிநேரம் அல்லதுஒருமணிநேரம் ஒதுக்கிவைத்தால் பல்வலி சரியாகிவிடும்

### மூட்டநாரிச்செடி

மூட்டநாரிச்செடி என்பது லுமவள்ளச் செடி, அமரச் செடி என்றும் அழைக்கப்படுகிறது. உரலில் போட்டு இடித்து அதனை சாறு பிழிந்து இருமல் சலி உள்ளவர்கள் ஒரு சங்கில் பாதிஅளவு ஊற்றி குடித்து வந்தால் சலித் தொல்லை நீங்கிவிடும்.

### மிளகு அருணைக்கொடி

மிளகு அருணைக்கொடியானது தலைவலிக்கு சிறந்த மருந்தாகும். இக்கொடியின் தண்டு மற்றும் இலைகளைப் பிடுங்கிஅ ம்மியில் வைத்து அரைத்து நெற்றியில் பத்துப்போட்டுக் கட்டினால் தலைவி நீங்கிவிடும்.

### நொச்சிச் செடி

புளியர்கள் தங்களுக்கு தடுமம் காய்ச்சல் வந்தால் உடனே மலையில் உள்ள நொச்சி இலைகளையும் அதனுடன் மிளகு அருணைக்கொடியினையும் சேர்த்து தண்ணீர் விட்டு வேகவைத்து அதனை ஆவி பிடிக்கின்றனர். ஆவி பிடிக்கும்போது போர்வை அல்லது சாக்கைப் போட்டு மூடி விடுகின்றனர். மூடிய பின்பு சட்டியில் உள்ள மூடியை கொஞ்சம் கொஞ்சமாகத் திறந்து ஆவி பிடிக்கின்றனர். இவ்வாறு செய்வதனால் தடுமம், காய்ச்சல் விட்டுவிடுகின்றது.

### சிறுதும்பைச் செடி

சிறுவர்களுக்கு காய்ச்சல் வந்தால் காய்ச்சல் குணமாக சிறுதும்பைச் செடியை இலைகளைப் பறிதது அதை உரலில் இட்டு இடித்து சாறு பிழிந்து அச்சாற்றினை சங்கில் வைத்து சிறிதளவு கொடுத்து வந்தால் காய்ச்சல் குணமாகும்.

### நாயுருவிச் செடி

உடலில் சூடு அதிகமானால் வயிற்றுப்போக்கு ஏற்படும். மேலும் கெட்டுப்போன உணவுப்பொருட்களை உண்பதாலும் வயிற்றுப்போக்கு உண்டாகும். இதனை தடுக்க நாயுருவிச் செடியின் இலைகளைப் பிடிங்கி வெறும் வயிற்றில் சாப்பிட்டு வர உடல் சூடு தணியும்.

### கொட்டப் பாக்கு

பளியர்கள் காடுகளில் வசிக்கும்போது ஏற்படும் தீவிபத்துக்களால் சில நேரங்களில் தீக்காயங்கள் ஏற்படும். அப்போது தீக்காயத்தில் இருந்து ஏற்ப்பட்ட காயத்தினை போக்க கொட்டப்பாக்கினை இடித்து பொடியாக்கி தீக்காயம் உள்ள இடத்தில் பூசுகின்றனர். அப்படி பூசினால் தீக்காயம் ஓரிரு நாட்களில் ஆறிவிடும்.

### முடிவுரை

காடுகளையும் மலைகளையும் இருப்பிடமாகக் கொண்டு வாழ்ந்துவரும் இந்த குண்டுரெட்டி பளியர் பழங்குடி மக்களுக்கு இன்றும் நோய் தீர்க்கும் மருந்தாக இருப்பவை அந்த காடு மலைகளில் கிடைக்கக்கூடிய மூலிகைச் செடிகளும், கொடிகளுமே ஆகும். இதன் வழியாக தங்களுக்கு ஏற்படும் பல்வேறு நோய்களை இந்த மருத்துவச் செடிகளைக் கொண்டு இன்றளவும் குணப்படுத்தி வருகின்றனர். ஆனால் இன்றைய ஆதிக்க சக்திகள் அதாவது நாகரீக வாசிகள் இப் பழங்குடி மக்களின் நிலங்களை அபகரித்து பல்வேறு தீய செயல்களுக்கு பயன்படுத்தி வருகின்றனர். இதனால் வனத்தில் உள்ள காட்டு வளங்கள் அழிக்கப்படுவதோடு அதில் உள்ள பழங்குடி மக்களின் மூலிகை மருந்துகளும் அழிக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய செயல்களைத் தடுத்து பழங்குடி மக்களின் பாரம்பரியமான மூலிகை மருத்துவத்தைக் காப்பது அனைவருடைய கடமையாகும்.

## References

Harichandran, S., (2018) Thamilaga Palangudikal Varalarum Samugap Panpadum, National Conference, Kongunadu Arts and Science College, Coimbatore, India.

Palanivel Rajan, (2014) Sathuragiri Malai Palliyarkalin Marappu Ariviyal, Madurai Kamaraj University, Madurai, India.

### Funding

No funding was received for conducting this study.

### Conflict of interest

The Author has no conflict of interest to declare that they are relevant to the content of this article.

### About the License

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

### Cite this Article

K. Kamaraj, Chathuragiri Hills Kunduruti Paliyars' Herbal Medicine, Indian Journal of Multilingual Research and Development, Vol 3, Iss S-1 (2022) 33-37. DOI: https://doi.org/10.54392/ijmrd223S17